பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 09 வெள்ளிக்கிழமை 22.05.2020 கதிர் 66

# முகமாலையில் பெருந்தொகை எலும்புக்கூடுகள் அடையாளம்!





## புலிகளின் சீருடைகள் துப்பாக்கிகள் மீட்பு

கிளிநொச்சி, மே 22

கிளிநொச்சி - முகமாலையில் பெருந்தொகை எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்த இடத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சீருடைகள் மற்றும் துப்பாக்கிகளும் காணப்படுகின்றன. 2 ☞

## ஞாயிறு, திங்கள் ஊரடங்கு!

கொழும்பு, மே 23

கொழும்பு, கம்பாஹா மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு மறு அறிவித்தல்வரை தொடரும். ஏனைய 23 மாவட்டங்களிலும் ஊரடங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை, மறுநாள் 25ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய இரு தினங்களிலும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. 2 ☞

## சிப்பாய் திடீரென மரணம்!

### மாதிரிகள் கொரோனா பரிசோதனைக்கு அனுப்பி வைப்பு

அம்பாறை, மே 22

அம்பாறை, காஞ்சிரங்குடா இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவச் சிப்பாய் ஒருவர் திடீரென உயிரிழந்ததைத்தொடர்ந்து, அவரது சடலம் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் நேற்றிரவு ஒப்படைக்கப்பட்டது.

42 வயதுடைய ஜயவிக்கிரம என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

சுவாசப் பிரச்சினை காரணமாக அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டபோதிலும், அவரின் தொண்டையில் இருந்து பெறப்பட்ட 2 ☞



## 1,055 ஆக எகிறியது கொரோனா

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களின் மொத்த எண்ணிக்கை 1,055 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுப் புதிய தொற்றாளர்களாக 27 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், இன்று எவரும் புதியதொற்றாளர்களாகஅடையாளம் காணப்படவில்லை எனவும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி தெரிவித்தார். 2 ☞



## விபத்தில் சிக்கியது விமானம்!

### பாகிஸ்தானில் 100 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று பெரும் அச்சம்

கராச்சி, மே 22

பாகிஸ்தானில் பயணிகள் விமானமொன்று விபத்துக்குள்ளானதில்ஏறக்குறைய100பயணிகள் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. 2 ☞

### தேர்தலை நடத்துவது எப்படி?

## கட்சிகளிடம் ஆலோசனை கேட்கின்றார் தேசப்பிரிய!



கொழும்பு, மே 22

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக சுகாதாரப் பிரிவினரோடு கலந்துரையாடி முடிவெடுக்கவுள்ளமையால் பிரசாரப் பணிகள் கைக்கொள்ளப்பட வேண்டிய முறை குறித்த அரசியல் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய -எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார். 2 ☞

## தேர்தலுக்கு எதிரான மனுக்களை உடனடியாகத் தள்ளுபடி செய்க!

* உயர்நீதிமன்றில் சட்டமா அதிபர் வேண்டுகோள்
* தேர்தலை நடத்தலாம் எனக் கோரும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மன்றில் சமர்ப்பிப்பு
* மனுக்கள் மீதான பரிசீலனை 5ஆவது நாளாக செவ்வாய் வரை மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, மே 22

நாடாளுமன்றத் தேர்தலுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் உடனடியாகத் தள்ளுபடி செய்யுமாறு, சட்டமா அதிபர், வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா சார்பில் உயர்நீதிமன்றத்தில் இன்று முன்னிலையான மேலதிக சொலி சிட்டர் ஜெனரல் இந்திகதேவமுனிடிசில்வா, இதனைத் தெரிவித்தார்.

அம்மனுக்களில், எவ்வித அடிப்படையோ, சட்டபூர்வமான செல்லுபடியாகும் தன்மையோ இல்லாததால், அம்மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலே தள்ளுபடி செய்யுமாறு, சட்டமா அதிபர் சார்பில் அவர் மன்றில் வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் திகதி தொடர்பான அதி விசேட வர்த்தமானி அறிவிப்பு மற்றும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட அதி விசேட வர்த்தமானி 2 ☞

# விபத்தில் இரண்டு பேர் படுகாயம்





கிளிநொச்சி, மே 22
கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முல்லையடி பகுதியில் விபத்தில் இருவர் படுகாய மடைந்துள்ளனர்.

இந்த விபத்து இன்று காலை இடம்பெற்றது.

விபத்தில் சிக்கிய இருவரும் பளை வைத்திய சாலையில் அனுமத்திக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஓட்டோ ஒன்றே இவ்வாறு விபத்துக்குள் ளாகியுள்ளது. விபத்தில் ஓட்டோச் சாரதியான 53 வயதுடைய வைரவநாதன் சிவராசா மற்றும் 71 வயதுடைய சுப்ரமணியம் துரைவீரசிங்கம் ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனப்பொலிஸார் குறிப்பிட்டனர்.

இருவரும் புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

விபத்து இடம்பெற்றமை தொடர்பான விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ராஜிதவுக்கு விடுதலைக்காக
# சஜித் தரப்பு நடத்திய போராட்டம் குறித்து பொலிஸ் விசாரணை

கொழும்பு, மே 22
வெள்ளை வான் கடத்தல் ஊடகவியலாளர் மாநாடு தொடர்பான வழக்கில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட தரப்பினரால் களுத்துறை நகரில் நடத்தப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், தனிமைப்படுத்தல் சட்டம் தொடர்ந்தும் அமுலில் உள்ள பின்னணியில், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி மக்களை ஒன்று திரட்டி இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனைகளுக்கு அமைய, களுத்துறை பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கபில பிரேமதாஸவின் தலைமையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் களுத்துறை நகரில் கடந்த 19ஆம் திகதி இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தைப் பொலிஸார் வீடியோ பதிவு செய்துள்ளதாகவும், இந்த வீடியோ பதிவின் ஊடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகத்தின் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

# கேப்பாபிலவு முகாமுக்குள் மேலும் 6 பேருக்கு தொற்று!

முல்லைத்தீவு-கேப்பாபிலவு விமானப் படைத்தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மேலும் ஆறு கடற்படையினருக்கு கொரோனா தொற்று இருப்பது பரிசோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று இருப்பதாக இனங்காணப்பட்ட ஆறு கடற்படையினரும் வெலிகந்தை வைத்தியசாலைக்கு இன்று வெள்ளிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.சுகந்தன் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தலுக்காக வெலிசறையிலிருந்து கேப்பாபிலவு விமானப் படைத்தளம் உள்ளிட்ட தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அண்மையில் 400 கடற்படையினர் அழைத்துவரப்பட்டனர்.

அவ்வாறு அழைத்துவரப்பட்டவர்களில் 99 பேருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் இருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டு நேற்று அறிவிக்கப்பட்டது. அவர்கள் நேற்று வெலிகந்தை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், மேலும் ஆறு பேருக்கு தொற்று இருப்பது இன்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் ஆறு பேரும் வெலிகந்த வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என வைத்தியர் சுகந்தன் மேலும் கூறினார்.

## முகமாலையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு இடம்பெற்று வரும் பகுதியில் இன்று இந்த எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் காணப்படும் எலும்புக்கூடுகள், தமிழீழ விடுதலைப்புலிகளின் சீருடைகள் பெண் போராளிகளாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் நிறுவன பணியாளர்களால் தகவல் வழங்கியுள்ளனர்.

இந்தநிலையில், சம்பவம் தொடர்பாக பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னரங்க காவலரண் முன்னர் அமைந்திருந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஞாயிறு, திங்கள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய 23 மாவட்டங்களிலும் நாளை சனிக்கிழமை இரவு 8.00 மணிக்கு நடைமுறைக்கு வரும் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்குத் தளர்த்தப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மாவட்டங்களில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஊரடங்குச் சட்டம் தினமும் இரவு 8.00 மணி முதல் அதிகாலை 5.00 மணி வரை மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளபோதும் இயல்புவாழ்க்கையை வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்காக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் நாளைய தினமும் நடைமுறையில் இருக்கும் அதேவேளை மே 26 செவ்வாய் முதல் முன்னர் போன்று தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

முந்தைய அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்ட ஊரடங்கு உத்தரவுகள் மாறாமல் உள்ளன என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## விபத்தில் சிக்கியது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லாகூரிலிருந்து கராச்சிக்குச் சென்ற பாகிஸ்தான் சர்வதேச எயார்லைன்ஸ் விமானமான 'ஏ - 320' விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விமானத்தில் பயணித்த ஏறக்குறைய 100 பயணிகளின் நிலைக் குறித்து அறிவதற்காக, தற்போது மீட்பு குழுவினர் சம்பவஇடத்திற்குவிரைந்துள்ளனர்.

கராச்சி விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கு சற்று முன்பு, மாடல் காலனிக்கு அருகிலுள்ள பகுதியில் விமானம் விபத்துக்குள்ளானதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாடல் காலனி என்பது கராச்சியில் ஜின்னா சர்வதேச விமான நிலையத்திலிருந்து வடகிழக்கில் இரண்டு மைல் தொலைவில் அமைந்துள்ளது.

தொலைக்காட்சிகளில் வெளியிடப்பட்ட செய்தியில், விபத்து நடந்த இடத்திலிருந்து புகை மற்றும் தீப்பிழம்புகள் எழும் காட்சிகள் தெளிவாக தெரிகின்றன.

## சிப்பாய் திடீரென .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாதிரிகள், சந்தேகத்தின் அடிப்படையில் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதானா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜி.சுகுணன் தெரிவித்தார்.

இதன் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்பே உடற்கூற்று பரிசோதனையை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.

அதுவரை சடலம் பாதுகாப்பான முறையில் பிளாஸ்டிக் பையினுள் இட்டு திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இவரது மரணம் தொடர்பான ஆரம்பகட்ட விசாரணைகளும் பரிசோதனைகளும் இடம்பெற்று வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை இன்று கிடைக்கப் பெற்றதும் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தலுக்கு எதிரான .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறிவிப்பு ஆகியவற்றுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் இன்று 5ஆவது நாளாக உயர்நீதிமன்றில் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த மனுக்கள், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹாரே, சிசிரா டி அப்ரு, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட ஆகிய ஐவர் கொண்ட நீதிபதிகள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு இன்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதேவேளை, தற்போதுள்ள தனிமைப்படுத்தல் நடைமுறைகளுக்கு அமைய நாடாளுமன்றத் தேர்தல் பணிகளை மேற்கொள்ள முடியும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்கவினால் தேர்தல் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என உயர்நீதிமன்றத்தில் இன்று தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலாளர் பீ.பி. ஜயசுந்தர சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வழங்கிய அந்தக் கடிதத்தையும் அவர் இன்று மன்றில் சமர்ப்பித்தார்.

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான பரிசீலனை இன்று ஐந்தாவது நாளாகவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இன்று பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றிருந்த நிலையிலேயே மனுக்கள் மீதான பரிசீலனை உயர் நீதிமன்றத்தால் எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## கட்சிகளிடம் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவசர கடிதம் ஒன்றை அவர் அந்தக் கட்சிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் ஆலோசனைகள் கிடைத்த கையோடு சுகாதாரப் பிரிவினருடன் பேச்சு நடத்தவுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், அதன் பின்னர் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்கவுள்ளார்.

அதற்கு முன் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் நீதிமன்றத்தின் அபிப்பிராயம் - தீர்ப்பு கிடைக்கும் என அவர் நம்புவதாகவும் அறியமுடிந்தது.

## 1,055 ஆக எகிறியது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்றுப் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் 15 பேர் டுபாயிலிருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் எனவும், 11 பேர் கடற்படையினர் எனவும், மற்றவர் குவைத்திலிருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க கூறினார்.

தொற்றுக்குள்ளாகியவர்களில் மேலும் 16 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 620 ஆக உயர்ந்துள்ளது.

இதுவரை தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் 09 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 426 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஜனாதிபதியின் தனித்துவ அதிகாரம்

"உயர் நீதிமன்றம் உத்தரவிட்டாலும் நாடாளுமன்றத்தைக் கூட்ட மாட்டேன்!" என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறினார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தக் கூற்றில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கருத்து, நோக்கம் ஆகிய இரண்டையும் வேறுபடுத்திப் பார்ப்பது அவசியமாகும்.

எடுத்த எடுப்பில் இந்தக் கூற்றை நோக்குபவர்கள், ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தின் உத்தரவை – தீர்ப்பை – மதிக்காமல் நடப்பதற்குத் தயாராகி விட்டார், எதேச்சாதிகரமாக அல்லது சர்வாதிகாரமாக நடக்கத் தயாராகி விட்டார் என்று கருதக் கூடும்.

ஆனால், சட்ட ரீதியாகவும், அரசமைப்பு ரீதியாகவும் அப்படி நடப்பதற்கு – செயற்படுவதற்கு – அவருக்கு அதிகாரம் உண்டு என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

அத்தகைய வகை தொகையற்ற அதிகாரத்தை ஜனாதிபதிக்குத் தற்போதைய அரசமைப்பு வழங்கி நிற்கின்றது.

எந்தச் சமயத்திலும் நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுங்கள் என்று உயர் நீதிமன்றம் ஜனாதிபதிக்கு உத்தரவிடப்போவதில்லை. இப்போது உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களில் அப்படி ஒரு கோரிக்கை வைக்கப்பட்டிருந்தாலும் கூட நீதிமன்று அப்படி உத்தரவிட வாய்ப்பில்லை. மார்ச் 2ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதியின் உத்தரவு செல்லுபடியற்றது என்றோ அல்லது வெற்றும் வறிதானதும் என்றோ நீதிமன்றம் உத்தரவிடலாம். அப்படி நாடாளுமன்றக் கலைப்புப் பிரகடனம் ரத்துச் செய்யப்பட்டால் நாடாளுமன்றம் மீளக் கூடக் கூடிய நிலைமை ஏற்படும். அதற்கு உயர் நீதிமன்றம் வழிகாட்டலாம். அதற்கு மேல் நாடாளுமன்ற நடவடிக்கை இப்படித்தான் அமைய வேண்டும், அதில் இன்ன விடயம் செய்ய வேண்டும் என்றெல்லாம் நீதிமன்றம் வழிகாட்டப் போவதுமில்லை. அது நீதிமன்றத்தின் வேலையுமில்லை.

நாடாளுமன்றக் கலைப்பு உத்தரவு சட்ட ரீதியானது அல்ல என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டால் அதன் காரணமாக –

* அதன் பின்னர் மீளவும் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரம் அவரது கையை விட்டு விட்டுப் போய் விடப்போவதில்லை.

* அதைப் போலவே நாடாளுமன்றத்தை இரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு இடைநிறுத்தும் ஜனாதிபதியின் பிரத்தியேக அதிகாரமும் அவருக்கு இல்லாமல் போய் விடாது.

இந்த இரண்டுமே ஜனாதிபதி பதவியில் இருப்பவர் தமது தற்றுணிபின் பேரில், அரசியல் ரீதியாகச் சிந்தித்து முடிவெடுக்கும் தனித்துவமான அதிகாரங்களாகும்.

அவற்றை ஜனாதிபதி பிரயோகிக்கும் போது சட்ட ரீதியான தேவைகளை நிறைவு செய்து பிரயோகிக்கின்றாரா என்பதில் வேண்டுமானால் உயர் நீதிமன்றம் தலையிடலாமே தவிர, அந்தத் தீர்மானம் சரியா, பிழையா, அதனால் என்ன சாதக, பாதகம் என்பவை பற்றி எல்லாம் உயர் நீதிமன்றம் ஆராயவும் முடியாது. தலையிடவும் முடியாது.

இப்போதும் கூட இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களில் மார்ச் 2 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்தமை தொடர்பான விடயத்தில் ஜனாதிபதி அப்படிச் செய்திருக்கக் கூடாது என்றோ அல்லது அப்படி நாடாளுமன்றத்தைக் கலைத்தமை தவறு என்றோ யாரும் வாதிட வில்லை. அந்தக் கலைப்புத் தொடர்பான சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு நிபந்தனையை ஜனாதிபதியினால் பூர்த்தி செய்ய முடியவில்லை என்பதனால் ஜனாதிபதியின் அந்தக் கலைப்பு உத்தரவு செல்லுபடியற்றது என்று உத்தரவிடுமாறே கோரப்படுகின்றது.

நாடாளுமன்றம் ஒன்று முற்கூட்டியே கலைக்கப்படுமானால் புதிய நாடாளுமன்றம் அடுத்த மூன்று மாதங்களுக்குள் கூட வேண்டும் என்று அரசமைப்பு எதிர்பார்க்கின்றது. ஜனநாயக நாட்டில் நாடாளுமன்றத்தை மூன்று மாத காலத்துக்கு மேல் செயற்படாமல் முடக்கி வைத்திருக்க முடியாது என்ற அடிப்படையில் கொண்டு வரப்பட்ட ஏற்பாடு இது.

இதனடிப்படையில்தான் இப்போது நாடாளுமன்றக் கலைப்பு உத்தரவு செல்லுபடியற்றது எனக் கட்டளை பிறப்பிக்குமாறு உயர் நீதிமன்றத்தைக் கோரப்படுகின்றது. மார்ச் 2 ஆம் திகதி கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் இடத்துக்கு ஜுன் 2 ஆம் திகதியாகியும் – மூன்று மாதங்கள் கடந்தும் – புதிய நாடாளுமன்றத்தைக் கூட்ட முடியாத நிலைமை இருப்பது வாஸ்தவம்தான். அதை அடிப்படையாகக் கொண்டே மார்ச் 2 ஆம் திகதி கலைப்பு உத்தரவு செல்லுபடியற்றது என்று கட்டளையிடக் கோரப்படுகின்றது.

ஆனாலும் இரண்டு, இரண்டு மாதங்களாக நாடாளுமன்றத்தை இடைநிறுத்தி வைக்கும் பிரத்தியேக – தனித்துவ – அதிகாரமும் அதே அரசமைப்பு மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்தை ஜனாதிபதி பிரயோகிக்கின்றமையை உயர் நீதிமன்றத்தினாலும் தடுக்கவே முடியாது.

ஆகவே உயர் நீதிமன்றம் சொன்னாலும் நாடாளுமன்றத்தைக் கூட்ட மாட்டேன் என்று கூறுவதற்கும் அதே நிலைப்பாட்டைக் கைக்கொள்வதற்கும் ஜனாதிபதி பதவியில் இருப்பவருக்கு அதிகாரம் உண்டு. சட்ட ரீதியாக யாரும் அதைக் கேள்விக்கு உட்படுத்த முடியாது. அரசியல் ரீதியாக வேண்டுமானால் மக்கள் மத்தியில் ஒரு கருத்துருவாக்கப் பிரசாரத்துக்கு இந்தப் போக்கை வாய்ப்பாகப் பயன்படுத்த முடியும். அவ்வளவே!

# தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவர்களும் கூட ஐ.நாவின் கதவுகளைத் தட்ட வேண்டி வரும்

## விரைவில் நடக்கும் என்கிறார் ரெலோவின் சுரேந்திரன்



தமிழ்மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் ஐ.நா வின் கதவுகளை விரைவில் தட்ட வேண்டி வரும் என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) தேசிய அமைப்பாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளருமான சுரேந்திரன் குருசுவமி தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக இன்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வர்மாறு:-

'உயர் நீதிமன்றம் நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுமாறு உத்தரவிட்டாலும் நான் ஒருபோதும் அதற்கு உடன்பட மாட்டேன்' - என ஜனாதிபதி சூளுரைத்திருப்பது, நாட்டின் நீதித்துறையை உதாசீனப் படுத்துவதோடு, தான் காக்க வேண்டிய அரசியல் சாசனத்தையும் தூக்கி வீசிய செயற்பாடாகும்.

தம்மைப் பாதுகாக்கும் என சிங்கள மக்கள் முழு நம்பிக்கை வைத்திருக்கும் அரசியல் சாசனத்தை நிராகரித்து, தனது நிறைவேற்று அதிகாரத்தை பாவித்து நாட்டின் ஜனநாயக்தைக் கேள்விக்குட்படுத்தி, அவரை ஆர்ப்பரிப்போடு தெரிவு செய்த பெரும்பான்மை மக்களின் முகத்திலும் கரியை பூசி, ஒட்டுமொத்த மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கும் ஆப்பு வைக்கும் வேலைதிட்டதின் ஆரம்பமே இதுவாகும். தழினின எதிர்ப்பு நடவடிக்கைகளால் இதை மூடிமறைக்க முற்படுவதை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனநாயகத்தையும் நாட்டு மக்களையும் மதித்து நடக்கின்ற நாடுகளே வேகமாக வளர்ச்சி அடைந்த நாடுகளாக மாறியுள்ளன. இலங்கை போன்ற சிறிய நாடுகளின் ஜனநாயக பண்புகளையும் பொறுப்புக் கூறலையும் பொறுத்தே அந்த நாட்டிற்கான உதவிகளை வழங்குவதற்கும் முதலீடுகளை செய்வதற்கும் வளர்ந்த நாடுகள் முன்வரும் என்பது நியதி. உலக நாடுகளின் பொருளாதாரத்தை கட்டமைத்தல், மனித உரிமைகளை பாதுகாத்தல், சுகாதார வசதிகளை மேம்படுத்தல் , மனித குலத்திற்கு எதிரான வன்முறைகளை தடுத்தல், சரியான வளப்பகிர்வை உறுதிசெய்தல் உள்ளிட்ட பல நோக்கங்களின்பால் பல நாடுகளை உள்ளடக்கிய பல சர்வதேச அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன.

அவ்வமைப்புக்களின் செயற்பாடுகளின் பலனாக பல சிறிய நாடுகள் தம்மை பலப்படுத்தி வருகின்றன. இதை உணர்ந்து செயற்பட வேண்டிய பொறுப்பு பிற நாடுகளை நம்பி வாழும் இலங்கைக்கும் பொருந்தும். இதை உதாசீனம் செய்யும் வகையில் இலங்கையின் ஜனாதிபதி பேசியிருப்பது ஒருசில இனவாதிகளை திருப்திப்படுத்தி இந்த நாட்டை இருண்ட யுகத்திற்கு இட்டுச்செல்லும் செயற்பாடாகவே அமையும்.

கடந்த 19 - 05 - 2020 அன்று இடம்பெற்ற போர்வெற்றிக்கொண்டாட்டத்தில்உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எந்த நாடுகளோ சர்வதேச அமைப்புக்களோ இலங்கையின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க விட மாட்டேன் எனவும் அதையும் மீறி அழுத்தங்களை பிரயோகத்தால் அந்த அமைப்புக்களின் உறுப்புரிமையிலிருந்து விலகிவிடுவோம் எனவும் இறுமாப்போடு கருத்துக்களை முன்வைத்திருந்தார். இந்த பேச்சைச் சாதாரணமாகக் கடந்துபோக முடியாது. இந்த உலகில் அமைதியையும் ஜனநாயகத்தையும் விரும்பும் அல்லது மதிக்கும் எவரும் இதை ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள்.

சில பெரும்பான்மை இனவாதிகளை திருப்திப்படுத்துவதாக நினைத்து முழு உலகத்தையும் பகைக்கும் விசப்பரீட்சையில் இறங்கியுள்ளார் ஜனாதிபதி. வெறும் தேர்தல் வெற்றியை இலக்குவைத்து இப்பேச்சு பேசப்படுகிறது. கொரோனா தாக்கத்தினால் பாரிய பொருளாதார பின்னடைவையும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான சர்ச்சையினால் ஜனநாயக பின்னடைவையும் சந்தித்துள்ள இந்த நாட்டிற்கு இவ்வாறான வீரப்பேச்சு அவசியமாஎன்பதே அறிவுள்ள நாட்டுமக்களின் கேள்வியாகவுள்ளது.

ஜனாதிபதியின் தூரநோக்கற்ற இந்த நிலைப்பாட்டை வெறுமனே தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாடாக நினைத்து மகிழ்ச்சியுறும் பெரும்பான்மையின மக்கள் காலப்போக்கில் சிங்கள மக்களை இது எந்தளவிற்கு பாதிக்குமென விளங்கிக்கொள்வார்கள். மாற்றுக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத - பொறுப்புக்கூறலை நிராகரிக்கின்ற - ஜனாதிபதியின் போக்கு தமிழர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரை மட்டுமன்றி ஜனாதிபதியினதும் அவரது கட்சிக்கும் ஆட்சிக்கும் எதிரானதுமான அரசியல் நிலைப்பாட்டை கொண்ட சிங்கள மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் தெற்கில் தனிக்கட்சி அரசியல் அல்லது துதிபாடும் அரசியல் சம்பிரதாயத்தையே ஊக்கப்படுத்தும்.

அதுமட்டுமன்றி அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகங்கள் உள்ளிட்ட பொது நிறுவனங்கள் யாவும் இரும்புக்கரம்கொண்டு நசுக்கப்படும். இதன்விளைவாக தமிழ் மக்கள் தற்போது நீதிகேட்டு ஐக்கிய நாடுகளின் வாசலில் நிற்பது போன்று எதிர்காலத்தில் சிங்கள மக்களும் தமக்கான ஜனநாயக உரிமைகளைக் கோரி ஐக்கிய நாடுகள் சபையின் கதவுகளை தட்டும் நிலை உறுதியாக ஏற்படும்.

ஒரு நாடு தனது நாட்டில் உரிமைகேட்டு போராடிய சிறுபான்மை இனத்தை அழித்துவிட்டு அந்த மக்கள் தமது உறவுகளை நினைவுகூரும் சம காலத்தில், அந்த மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசு அதை வெற்றிக் கொண்டாட்டமாக கொண்டாடுவதே தவறான முன்னுதாரணமாகும். அந்த நிகழ்வில் நாட்டின் ஜனாதிபதி தனது பொறுப்பை உணராமல் பேசியிருப்பது மொத்த நாட்டினையும் பாதிக்கும் என்பதனை இந்த நாட்டுமக்கள் உணரும் காலம் வெகுதொலைவில் இல்லை. - என்று உள்ளது.

# உயர்நீதிமன்றத்துக்குச் சவால்விட்டு மைத்திரி போல் அவமானப்படாதீர்

## கோட்டாவுக்கு மங்கள அறிவுரை

கொழும்பு, மே 22

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போல் இந்நாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் உயர்நீதிமன்றத்துக்குச் சவால் விட்டு அவமானப்பட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டாலும் தாம் கூட்டப் போவதில்லை என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் மங்கள சமரவீர கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 2018ஆம் ஆண்டு 52 நாள் அரசியல் சதிப் புரட்சியின்போது உயர்நீதிமன்றத்துக்குச் சவால் விட்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்பட்டிருந்தார். எனினும், நீதிமன்றத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பின் பிரகாரம் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் மீளக்கூட்டப்பட்டது. இதை இந்நாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் மனதில்கொண்டு செயற்பட வேண்டும். தற்போதைய மனுக்களின் பிரகாரம் நாடாளுமன்றக் கலைப்பு வர்த்தமானி அறிவிப்பு செல்லுபடியற்றது என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் நாடாளுமன்றத்தை சபாநாயகரால்கூட மீளக்கூட்ட முடியும். அதற்குரிய அதிகாரம் தற்போதைய அரசமைப்பில் இருக்கின்றது - என்றார்.

# திமுக வெளியேற்றிய துரைசாமி உடன் பா.ஜ.கட்சியில் இணைவு



திராவிட முன்னேற்றக் கழக (திமுக). துணைப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட வி.பி.துரைசாமி உடனடியாகவே இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியில் சேர்ந்தார்.

வி.பி. துரைசாமி அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்கான காரணங்கள் குறித்து பல்வேறு யூகங்கள் நிலவுகின்றன.

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நேற்று, வியாழக்கிழமை, நீக்கப்பட்ட வி.பி. துரைசாமி இன்று, வெள்ளிக்கிழமை, பாரதிய ஜனதா கட்சியில் இணைந்தார்.

வி.பி. துரைசாமி, 1989இலிருந்து 1991வரையிலும் 2006இலிருந்து 2011வரையிலும் தி.மு.க. சார்பில் தமிழக சட்டப்பேரவை துணைத் தலைவராகவும் பொறுப்புகளை வகித்தவர்.

திங்கட்கிழமையன்று பா.ஜ.கவின் தலைமை அலுவலகமான கமலாலயத்திற்குத் தன் மகனுடன் சென்ற துரைசாமி, அக்கட்சியின் மாநிலத் தலைவர் எல். முருகனை சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பு அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியத்துடன் பார்க்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமையன்று ஊடகங்களிடம் பேசிய துரைசாமி, முருகன் தன் ஊரைச் சேர்ந்தவர், சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால் சென்று சந்தித்து, வாழ்த்துத் தெரிவித்தார் என்றும் கூறினார்.

மேலும், தி.மு.கவின் செயல்பாடுகள் குறித்து சில கருத்துகளை முன்வைத்த துரைசாமி, மாநிலங்களவைத் தேர்தலில் தனக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென உதயநிதி ஸ்டாலினிடம் கேட்டதாகவும் வாய்ப்பு கிடைக்கவில்லையென்றும் கூறியிருந்தார்.

நாடாளுமன்றப் பதவிக்காக வயது வித்தியாசம் பார்க்காமல் உதயநிதியை நேரில் சந்தித்துக்கெஞ்சினேன். அதுதப்பு இல்லை. ஏனென்றால், கட்சி அவர்களுடையது என்றும் கூறியிருந்தார்.

இந்த நிலையில், துரைசாமி அவர் வகித்துவந்த துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுவதாக தி.மு.க. தலைமை அறிவித்தது. அவருக்குப் பதிலாக அந்தியூர் செல்வராஜ் நியமிக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டது.

நடந்து முடிந்த மாநிலங்களவைத் தேர்தலில் தனக்கு வாய்ப்பளிக்கப்படும் என துரைசாமி எதிர்பார்த்த நிலையில், அந்தியூர் செல்வராஜிற்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட்டது. அதிலிருந்தே துரைசாமி அதிருப்தியிலிருந்து வந்தார்.

இந்த நிலையில், முரசொலி நாளிதழின் இடம் தொடர்பாக சர்ச்சைகளை ஏற்படுத்திவந்த எல். முருகனை துரைசாமி சென்று சந்தித்ததும், அந்தச் சந்திப்பு குறித்த செய்திகள் பா.ஜ.க. சார்பில் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டதும் கட்சித் தலைமைக்கு ஏற்புடையதாக இல்லையென்று கூறப்படுகிறது.

## 'ஜெ'வின் வீட்டை நினைவிடமாக்க பணிகளை தொடங்கியது தமிழ்நாடு



மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவின் வேதா நிலையம் வீட்டை நினைவில்லமாக மாற்றுவதற்கு அந்த நிலத்தைக் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது என்றும் நினைவு இல்லம் அமைக்க அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நினைவு இல்லம் அமைப்பதற்காக அந்த அமைப்பின் தலைவராக முதல்வர் எடப்பாடி பழனிசாமி மற்றும் துணை முதல்வர் பன்னீர்செல்வம், மக்கள் தொடர்பு துறை அமைச்சர் கடம்பூர் ராஜூ மற்றும் அரசு அதிகாரிகள் உறுப்பினர்களாகச் செயல்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேதா நிலையத்தையும், அங்குள்ள பொருட்கள், நகைகள், புத்தகங்கள் உள்ளிட்டவற்றையும் பராமரிக்க இந்த அமைப்பு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதன் மூலம் ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வேதா நிலையம் மற்றும் அங்குள்ள பொருள்களை அரசுடைமையாக்க வழிவகை செய்யும் வகையில் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்காலிகமாக அந்த பொருள்கள் அரசின் வசம் இருக்கும் என்றும் நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிந்த பின்னர், நினைவு இல்லத்தில் அவை வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேதா நிலையம் இல்லம் நினைவிடமாக ஆக்கப்படும் என தமிழக அரசு அறிவித்திருந்தது. அந்த அறிவிப்பு வெளியாகி மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது அதற்கான அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கடன் தவணையைச் செலுத்த மேலும் 3 மாத கால அவகாசம்

### இந்திய ரிசர்வ் வங்கி அறிவிப்பு



இந்தியாவில் வங்கிகள் உள்ளிட்ட நிதி நிறுவனங்கள் வழங்கிய கடன்களுக்கான தவணைக் கட்டணங்களைச் செலுத்த அளிக்கப்பட்ட மூன்று மாத கால அவகாசம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ் இன்று காலை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கால அவகாசம் மே மாத இறுதியில் முடிவடையவுள்ள நிலையில், மேலும் மூன்று மாதங்களுக்கு அது நீட்டிக்கப்படுகிறது என்றும் அவர் அறிவித்தார்.

அத்தோடு, இந்திய ரிசர்வ் வங்கி ரெப்போ விகிதத்தை 40 அடிப்படைப் புள்ளிகள் அளவுக்கு குறைத்துள்ளது.

இதன் மூலம் ரெப்போ வட்டி விகிதம் 4.4% இல் இருந்து 4% ஆகக் குறைந்துள்ளது.

ரிவர்ஸ் ரெப்போ விகிதமும் 3.75% இல் இருந்து 3.35% ஆகக் குறைந்துள்ளது.

ரெப்போ (repo rate) விகிதம் என்பது ஒரு நாட்டின் மத்திய வங்கி, அந்த நாட்டிலுள்ள வங்கிகளுக்கு வழங்கும் கடனுக்கான வட்டி விகிதமாகும். வங்கிகளிடம் இருந்து ஒரு நாட்டின் மத்திய வங்கி வாங்கும் கடனுக்கான வட்டி விகிதம் ரிவர்ஸ் ரெப்போ (reverse repo rate) எனப்படும்.

அதாவது ஒகஸ்ட் மாதம் வரை இந்த அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான கடன்களுக்கும் தவணைக்காலம் 15 மாதங்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறிய பிற முக்கியத் தகவல்களின் தொகுப்பு.

கொவிட் - 19 காரணமாக தனிநபர் நுகர்வு 33% குறைந்துள்ளது.

ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை குறைந்துவந்த உணவுப்பொருள்களுக்கான பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 8.6% ஆக உயர்ந்துள்ளது.

2020 - 21ஆம் நிதியாண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி குறையும்.

இந்த நிதியாண்டின் இரண்டாம் பாதியில் பொருளாதார நடவடிக்கைகள் கொஞ்சம் கொஞ்சமாக இயல்பு நிலைக்குத் திரும்பத் தொடங்கும்.

இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு 9200 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்து 487 பில்லியன் டொலராக உள்ளது.

## தந்தையையும் ஏற்றிக்கொண்டு 1,200 கி.மீ. சைக்கிள் ஓடிய சிறுமி

### அதிசயிக்கிறது இந்திய சைக்கிளிங் பெடரேசன்





கொரோனாவால் வாழ்விழந்த தந்தையுடன் 1,200 கி.மீ. சைக்கிள் ஓட்டிய சிறுமியின் பக்கம் இந்திய ஊடகங்களின் கவனம் திரும்பியிருக்கிறது.

கொரோனா வைரஸ் தொற்று நோய் உலகெங்கும் பாதிப்புகளை ஏற்படுத்தி வந்தாலும், மறைமுகமாக பலருடைய வாழ்க்கைப்பாதையையே மாற்றிப் போட்டு விட்டது என்னவோ உண்மைதான்.

இந்த வரிசையின் சேருகிறார், பீகாரை சேர்ந்த 15 வயது சிறுமி ஜோதி குமாரி. 8ஆம் வகுப்பு மாணவி.

இந்தச் சிறுமி, தனது தந்தை மோகன் பஸ்வானுடன் அரியானா மாநிலம் குர்கானில் (குருகிராம்) வசித்து வந்தார்.

மோகன் பஸ்வான், ஆட்டோ சாதியாக இருந்து வந்தார். கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கால் வாழ்வாதாரத்தை இழந்தார். ஒரு விபத்திலும் சிக்கி காயம் அடைந்தார். அவரிடம் இருந்த ஆட்டோவை அதன் உரிமையாளர் திரும்பப் பெற்றுக்கொண்டார்.

இனி என்ன செய்வது என விதியை நொந்தவாறு யோசித்த அவர், 1,200 கி.மீ. தொலைவில் பீகாரில் உள்ள சொந்த கிராமத்துக்குத் திரும்பி அங்கேயே பிழைப்பைத் தேடிக்கொள்வது என முடிவு செய்தார்.

கையில் இருந்த பணத்தைக்கொண்டு மகளிடம் ஒரு சைக்கிள் வாங்கித் தந்தார்.

தந்தையை சைக்கிளின் பின்னால் அமர வைத்துக்கொண்டு, ஜோதி குமாரி கடந்த 10ஆம் திகதி குர்கானில் சைக்கிளை எடுத்தார். 7 நாட்கள் இரவும், பகலும் தொடர் சவாரிக்குப் பின்னர் கடந்த 16ஆம் திகதி பீகாரில் உள்ள சொந்தக் கிராமத்துக்கு தந்தையுடன் சென்றடைந்தார்.

1,200 கி.மீ. தொலைவுக்கு தனது தந்தையை பின்னால் ஏற்றிக்கொண்டு ஒரு சிறுமி சைக்கிள் ஓட்டி இருக்கிறார் என்பது பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தி விட்டது.

இது பற்றி டெல்லியில் இந்திரா காந்தி உள் விளையாட்டு அரங்கில் அமைந்துள்ள தேசிய சைக்கிளிங் பெடரேசன் அறிந்து அதிர்ந்துபோனது. அதெப்படி ஒரு சிறுமிக்கு இது சாத்தியமாயிற்று என்று வியந்தும் போனது.

இப்போது சிறுமி ஜோதிகுமாரியை அழைத்து அவரது சைக்கிள் ஓட்டும் திறனை சோதித்துப்பார்ப்பது என்று முடிவு செய்திருக்கிறது, இந்திய விளையாட்டு ஆணையத்தின் கீழ் செயல்படும் இந்த அமைப்பு.

இதுபற்றி இந்த அமைப்பின் தலைவர் ஓங்கர் சிங் சொல்லும்போதே வியந்து போகிறார்.

ஒரு எட்டாம் வகுப்பு மாணவி இதைச் செய்திருக்கிறார் என்றால் அது வியக்க வைக்கிறது. அந்தச் சிறுமியிடம் ஏதோ ஒன்று இருக்க வேண்டும். இல்லையென்றால் 1,200 கி.மீ. தொலைவுக்கு சைக்கிள் ஓட்டுவது என்பது சாதாரணமானது அல்ல. அந்தச் சிறுமியிடம் அதற்கான வலிமை, உடல்வாகு இருக்க வேண்டும்.

எங்களிடம் உள்ள கணினிமயமாக்கப்பட்ட சைக்கிளில் அந்த சிறுமியை அமர வைத்து சோதிப்போம். நாங்கள் தேர்ந்தெடுக்கும் 7 அல்லது 8 அம்சங்களில் அவர் தேர்ச்சி பெறுகிறாரா என்று பார்ப்போம். தேர்ச்சி பெற்று விட்டால், ஜோதிகுமாரி பயிற்சியாளர்களில் ஒருவராக இருக்க முடியும். ஏற்கனவே எங்களிடம் 14, 15 வயதில் 10 வீரர்கள் இருக்கிறார்கள். இளம் வீரர்களை நாங்கள் வளர்த்தெடுக்க விரும்புகிறோம்" என்றார்.

# கொரோனா ஏற்படுத்தியுள்ள பட்டினியால் திணறும் அமெரிக்கா!

உலகின் வலிமை மிக்க நாடாகக் கருதப்படும் அமெரிக்காவில், கொரோனாவைரஸ்பட்டினிப்பிரச்சினையைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த வைரஸ் பாதிப்பால், இன்றைய நிலவரப்படி அமெரிக்காவில்சுமார்96ஆயிரம்பேர்உயிரிழந்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. தொழில்கள் முடக்கம், பொருளாதார நடவடிக்கைகளின் வீழ்ச்சி காரணமாக ஏராளமானோரின் வாழ்க்கை புரட்டிப் போடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கடந்த 8 9 வாரத்தில், 3.6 கோடி பேருக்கும் மேலானோர் வேலை இழந்துள்ளனர். சரியான எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும் என்கிறார்கள்.

1.12 கோடி குழந்தைகள் உள்ளிட்ட சுமார் 3.72 கோடி பேர் வீடுகளில் 'உணவுக்கு உத்தரவாதமின்றி' இருப்பதாக 2018இல் வெளியான ஓர் அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. எனில் இப்போது நிலைமை மேலும் மோசமானது என்பதைக் கூறத் தேவையில்லை.

அமெரிக்காவில் பட்டினி அல்லது 'உணவுக்கு உத்தரவாதமின்மை' என்பது, ஆரோக்கியமான இயல்பு வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான உணவு தொடர்ந்து கிடைக்காத சூழ்நிலை இருப்பதைக் குறிக்கிறது.

3.72 கோடி என்ற எண்ணிக்கை, கொரோனா நெருக்கடி சூழ்நிலையில் 5.4 கோடியைத் தாண்டக் கூடும் என்று பீடிங் அமெரிக்கா (ய்ளள-ஷ்ஜஆ புதுளஷஷ்உழி) என்ற பட்டினி நிவாரண அமைப்பு தெரிவித்துள்ளது. இதில் 1.8 கோடி பேர் குழந்தைகளாக இருக்கக் கூடும்.

"இந்த நோய்த் தொற்று காரணமாக அமெரிக்காவில் நான்கில் ஒரு குழந்தை இந்த ஆண்டு பட்டினிக்கு ஆளாக நேரிடும்" என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

டெக்சாஸ் மாகாணத்தில் ஓரிடத்தில், உணவு வங்கிக்கு வெளியே, உணவுப் பொட்டலங்களை வாங்குவதற்கு சுமார் 10 ஆயிரம் பேர் காத்திருந்தனர்.

தெற்கு புளோரிடாவில் உணவு வங்கிக்கு வெளியே உணவுக்காக பல மைல்கள் நீளத்துக்கு கார்களில் மக்கள் காத்திருந்தனர்.

அமெரிக்க மத்திய அரசின் உதவியில் நடைபெறும் கூடுதல் ஊட்டச்சத்து உதவித் திட்டத்தின் (ற்ஹிபூண) மூலம் கிடைக்கும் உதவிகள் போதுமானதாக இல்லை என்கின்றனர் நிபுணர்கள்.

வழக்கமாக கடைகளில் உணவு வாங்கும் குறைந்த வருவாய் ஈட்டும் தனி நபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு ஊட்டச்சத்து உணவுகளை அளிப்பதே சினப் (ற்ஹிபூண) திட்டத்தின் நோக்கம்.

தேவைகள் குறைந்தது, உணவு பதப்படுத்தும் ஆலைகள் மூடியது ஆகிய காரணங்களால் விஸ்கான்சின் மாகாணத்தில் ஆயிரக்கணக்கான லீற்றர் பால் பண்ணையாளர்களால் வீணடிக்கப்படும் நிலையில் இது முரண்பட்டதாக உள்ளது.

புளோரிடாவில் பல்லாயிரம் டன் பசுமையான பீன்ஸ்களை டிராக்டர்களை ஏற்றி அழிக்கும் நிலையும், வயல்களில் பயிர்களை அறுவடை செய்யாமல் விவசாயிகள் விட்டதால் அழுகும் நிலையும் உள்ளது.

இறைச்சி பதப்படுத்தும் ஆலைகள் மூடப்பட்டதால் மின்னசோட்டாவில் தினமும் சுமார் 10 ஆயிரம் பன்றிகளும், லட்சக்கணக்கான கோழிகளும் கொன்று புதைக்கப்படுகின்றன..

ஒரு பக்கம் உண[illegible] நிலையில், உண[illegible]த்தரவாதம் இல்லாத நிலையும் இருப்பது அமெரிக்கர்க[illegible] என்று சி.எஸ்.ஐ.எஸ் [illegible]ளாவிய உணவுப் பாதுகாப்பு செயல்திட்ட பணிப்பாளர் கெய்ட்லின் வெல்ஷ் கூறியுள்ளார்.

"நமக்குத் தேவையான உணவும் காய்கறிகளும் இருக்கின்றன. இறைச்சிப் பிரியர்களுக்கு வேண்டிய அளவுக்கு விலங்குகளும் உள்ளன. வழங்கல் சங்கிலி சரியாக இல்லாததுதான் பிரச்சினை" என்று கெய்ட்லின் வெல்ஷ் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகளுக்கு அரசு உதவிக்கரம் நீட்டி, விளைபொருள்கள், பால் மற்றும் இறைச்சியை கொள்முதல் செய்து உணவு வங்கிகளுக்கு வழங்கப் போவதாகச் சொல்லப்பட்டது. 19 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவிற்கான கொரோனா வைரஸ் உணவு உதவித் திட்டத்தில் இவை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

"அவசரமாக உணவு தேவைப்படும் நிலையில் எங்கள் உணவு வங்கிக்கு வருபவர்களின் எண்ணிக்கை 500 மடங்கு அதிகரித்துள்ளது" என்று கிரேட்டர் பிட்ஸ்பர்க் சமுதாய உணவு வங்கியைச் சேர்ந்த பிரியன் குலிஷ் தெரிவித்தார். இந்த அமைப்பு தென்மேற்கு பெனிசில்வேனியா உள்ளிட்ட 11 மாகாணங்களில் உணவு வழங்குகிறது.

"மார்ச், ஏப்ரல் மாதங்களில் மட்டும் உணவுக் கொள்முதலுக்காக நாங்கள் 5 முதல் 6 லட்சம் டாலர் வரை செலவிடுவோம். இந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் 17 லட்சம் டாலர் செலவிட்டிருக்கிறோம்" என்று பிரியன் தெரிவித்தார்.

"அதாவது சாதாரண காலத்தில் சராசரியாக செலவிடுவதைக் காட்டிலும், கடந்த இரண்டு மாதங்களில் நாங்கள் 11லட்சம் டொலர் அதிகமாக செலவிட்டிருக்கிறோம். ஆண்டு முழுக்க கணக்கிட்டால் நாங்கள் கூடுதலாக 1 முதல் 1.5 கோடி டொலர் உணவு கொள்முதலுக்கு செலவிட வேண்டியிருக்கும்" என்று அவர் கூறினார்.

## வாரத்தில் 4 நாள்கள் மட்டுமே வேலை யோசனைக்கு நியூஸி. பிரதமர் ஆதரவு!

வாரத்தில் 4 நாள்கள் மட்டுமே வேலை, மற்ற 3 நாள்களும் விடுமுறை என்ற யோசனைக்கு நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் ஆதரவு தெரிவித்துள்ளார்.

உலகையே ஆட்டிப்படைத்து வரும் கொரோனா வைரஸை வெற்றிகரமாகத் தொடக்கத்திலேயே கட்டுப்படுத்தியவர் என்ற வகையில் அதிகம் கவனத்திற்கு உள்ளானவர் நியூஸிலாந்து பிரதமர்.

50 லட்சம் மக்கள்தொகை கொண்ட நியூசிலாந்தில் கொரோனாவால் 21 பேர் மட்டுமே உயிரிழந்துள்ளனர். ஆயிரத்து 503 பேர் பாதிப்புக்குள்ளாகினர். தற்போது 30 பேர் மட்டுமே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், வாரத்தில் 4 நாள் மட்டுமே வேலை, மற்ற 3 நாட்களும் விடுமுறை என்ற யோசனைக்கு நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் முகப் புத்தகத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், வாரத்தில் 4 நாள் வேலை வேண்டும் என நிறைய பேர் விருப்பம் தெரிவித்துள்ளனர். வாரத்தில் 3 நாள் விடுமுறை என்பது நீண்ட விடுமுறையாகும். இதனால் நியூசிலாந்து மக்கள் நாடு முழுவதும் அதிகம் பயணிக்க வழி கிடைக்கும். தற்போது நாட்டின் எல்லைகள் மூடப்பட்டுள்ள நிலையில் உள்நாட்டில் சுற்றுலா மற்றும் பொருளாதாரத்தை உயர்த்த இது வழிவகுக்கும் என பதிவிட்டுள்ளார்.

## அமெ.வில் அடுத்த 3 நாள்களுக்கு அரைக்கம்பத்தில் தேசியக்கொடி

அமெரிக்காவில் அடுத்த மூன்று நாள்களுக்கு தேசியக் கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்கவிடும்படி அதிபர் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்காவில் கொரோனா வைரசின் தாக்கம் தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. 16.2 லட்சம் பேருக்கு இதுவரை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், 96 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இறப்பு எண்ணிக்கை விரைவில் ஒரு லட்சத்தை எட்டும் என அஞ்சப்படுகிறது. நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் ஒருபுறம் தீவிரமாக நடைபெற்றாலும், உயிரிழப்புகளை தடுக்க முடியாமல் மருத்துவத் துறை திணறி வருகிறது.

இந்த நிலையில், கொரோனாவால் உயிரிழந்த அமெரிக்கர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அடுத்த மூன்று நாள்களுக்கு தேசியக்கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்க விடும்படி அதிபர் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

"கொரோனா வைரசால் உயிரிழந்த அமெரிக்கர்களின் நினைவாக அடுத்த மூன்று நாள்களில் அனைத்து மத்திய அரசு அலுவலக கட்டடங்கள், தேசிய நினைவுச் சின்னங்களில் தேசியக் கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்கவிடும்படி உத்தரவிட்டுள்ளேன்.

மேலும் நாட்டிற்கு சேவை செய்து உயிர்நீத்த படையினரின் நினைவு நாளையொட்டி அவர்களுக்கு



மதிப்பளிக்கும் வகையில் தேசியக்கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கும்" என டிரம்ப் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

கொரோனா உயிரிழப்பு ஒரு லட்சத்தை எட்ட உள்ள இந்த துயரமான நாளில், அஞ்சலி செலுத்த வேண்டும் என ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் கேட்டுக் கொண்டதையடுத்து டிரம்ப் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாளாந்தம் ஒரு லட்சம் பேருக்கு தொற்று உலகத்தைப் பதற வைக்கும் கொரோனா

உலகமெங்கும் இதுவரை இல்லாத வகையில் நாளாந்தம் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோருக்கு கொரோனா வைரஸ் தொற்றுப் பரவி வருகின்றது. இது நோய்ப் பரவல் வீழ்ச்சியை நோக்கி இன்னும் நகரவில்லை என்பதைக் காட்டுவதாக வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

சீனாவில் வுஹான் நகரில் கடந்த டிசெம்பர் முதலாம் திகதி கண்டறியப்பட்டகொரோனா வைரஸ், இந்த 5 மாத காலத்தில் உலகமெங்கும் காட்டுத் தீ போல பரவி இருக்கிறது.

ஊரடங்கு, வீட்டுக்குள் பொதுமக்கள் முடக்கம், முககவசம் அணிதல், தனிமனித இடைவெளியை கடைப்பிடித்தல், கைகளை சானிடைசர் திரவம் கொண்டு அடிக்கடி சுத்தப்படுத்துதல் என பல கட்டுப்பாட்டு வழிகளைக் கையாண்டும் கொரோனா பரவுவது குறையாமல், உலகமே கையைப் பிசைந்து கொண்டிருக்கிறது.

கொரோனா வைரஸ் உலகமெங்கும் 50 லட்சத்துக்கும் அதிகமானோரைப் பீடித்திருக்கிறது. முன்றேகால் லட்சத்துக்கும் அதிகமானோரைக் கொன்றிருக்கிறது.

இந்த நிலையில் நேற்றுக் காலையுடன் முடிந்த 24 மணி நேரத்தில் கொரோனா வைரஸ் 1 லட்சத்து 3 ஆயிரத்து 981 பேருக்குத் தாக்கி இருப்பது பதிவாகி உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இன்று காலையுடன் முடிந்த 24 மணி நேரத்தில் ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 85 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளதாக அமெரிக்காவின் ஜோன்ஸ் கொப்கின்ஸ் பல்கலைக்கழக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

இதுவரை இல்லாத வகையில் ஒரு நாளில் பதிவான அதிகபட்ச பாதிப்பு எண்ணிக்கைகள் இது என உலக சுகாதார நிறுவனம் சொல்கிறது.

உலகமெங்கும் கொரோனா பாதிப்புக்கு ஆளானோர் எண்ணிக்கை 49 லட்சத்தை கடந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் கூறினாலும், ஜோன்ஸ் கொப்கின்ஸ் பல்கலைக்கழகம் 51 லட்சத்துக்கும் அதிகமானவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறுகின்றது.

உண்மையான எண்ணிக்கை இன்னும் அதிகம் என்றும், குறைவான பரிசோதனைகளே உலகமெங்கும் நடந்துவருவதாகவும், தொற்று ஏற்பட்டுள்ள பலரதும் விவரங்கள் வெளியே வருவதில்லை என்றும் ஜெனீவாவில் இருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# சீரற்ற வானிலையால் 20,265 பேர் பாதிப்பு!

கொழும்பு, மே 22

நாட்டில்நிலவும்சீரற்றவானிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 5 ஆயிரத்து 356 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 265 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்களால் இதுவரை 3 பேர் உயிரிழந்துள்ளதுடன், 4 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 142 குடும்பங்களைச் சேர்ந்த 608 பேர், தெரிவு செய்யப்பட்ட 34 பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கடந்தநாட்களில்ஏற்பட்டஅனர்த்தங்களால் 21 வீடுகள் முழுமையாகவும், 2 ஆயிரத்து 150 வீடுகள் பகுதி அளவிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

# சண்டிலிப்பாய் சீரணி ஆலயத்தில் பூசைகள் தொடர்பில் பதற்ற நிலை



யாழ். சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஆலயத்தில் அதன் உரிமையாளர் என கூறப்படுவோரால் ஆலய குரு மாற்றப்பட்டதால் இன்று குழப்ப நிலை ஏற்பட்டது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஆலய நிர்வாகம் இயங்கவில்லை.

ஆலயத்தின் உரிமை தொடர் பான வழக்கு நீதி மன்றத்தில் இடம்பெற்றுக் கொண்டிருப்ப தால் 11 வருடங்களாக நிர்வாகம் இயங்கவில்லை.

இருந்தபோதிலும்அதன் உரிமையாளர் என சொல்லப் படும் ஒரு சிலர் மட்டும் தான் அதன் நிதி வளங்களையும் பூசை போன்றவற்றையும் தொடர்ந்து கவனித்து வந்தனர்.

இந்த நிலையில் பல வருடங்களாக அங்கு பூஜை செய்து வரும் குருக்கள் முன்னிலையில் ஆலயத்தின் பெறுமதியான பொருள்கள் சில உரிமையாளர் எனக் கூறப்படுபவர்களினால் எடுத்துச் செல்லப்பட்டமையை அடுத்து குருக்கள் அதிரடியாகப் பணியிலிருந்து நிறுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டார் எனக் கூறப்படுகின்றது. வேறு ஒரு அர்ச்சகர் ஆலயத்தில் காலை பூசை வழிபாடுகளை மேற்கொள்ள முற்பட்டமையைத் தொடர்ந்து அங்கு கூடிய கிராம மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தமையால் காலை பதற்றம் நிலவியது.

சம்பவ இடத்திற்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் கொரோனா காலத்தில் ஆலயத்தில் இவ்வாறு ஒன்றுகூட முடியாது எனக் கூறி உடனடியாக அனைவரையும் வெளியேற்றினர். சம்பவத்துடன் தொடர்பு கொண்டவர்களை விசாரணைக்காக மானிப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கையில் வறுமை இனிமேல் மிக உயரும்

கொழும்பு, மே 22

கொரோனா வைரஸ் காரணமாக இலங்கையில் வறுமை நிலை அதிகரிப்பது தவிர்க்க முடியாத விடயம் என கொழும்பு பல்கலைகழகத்தின் பொருளியல் பேராசிரியர் சிறிமால் அபயரட்ண தெரிவித்துள்ளார்.

வறுமையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அரசின் கடமை எனவும் அவர் குறிப்பிட்டார்.

நகரப்பகுதிகளில் வாழும் வறிய மக்களே இவ்வாறு வறுமையினால் அதிகளவு பாதிக்கப்படப்போகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் நாளாந்தம் உழைப்பவர்கள், முறைசார தொழில்துறைகளில் உள்ளவர்கள் மேலும் கிராமங்களில் உள்ள வறியவர்கள் போல இவர்கள் விவசாயத்திலும் ஈடுபடுவதில்லை எனவும் பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையை தடுத்து நிறுத்துவதற்கு அரசுகள் குறுகிய கால நீண்ட கால நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரியர் சிறிமால் அபயரட்ண சுட்டிக்காட்டினார்.

குறுகிய காலத்தில் வறுமையை கட்டுப்படுத்துவதற்காக பல வழிகளில் நிதியைச் செலவிடவேண்டியிருக்கும் எனவும், பல நாடுகளில் வேலைவாய்ப்பற்ற நிலையில் உள்ளவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கவேண்டியிருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

அத்துடன், வறியவர்கள் குறித்து கவனம் செலுத்தவேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கு உள்ளது எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

# மேலும் 16 பேர் குணமடைவு

கொழும்பு, மே 22

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த மேலும் 16 பேர் பூரணமாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 620 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்த 16 பேரில் 13 கடற்படையினர் உள்ளடங்கும் நிலையில், குணமடைந்த மொத்த கடற்படை உறுப்பினர்களின் எண்ணிக்கை 250 ஆகும்.



# பாலத்தில் கேடர்கள் திருட்டு: பிரதான சந்தேக நபர் மறைவு

## ஒருவர் பொலிஸாரினால் கைது

கிளிநொச்சி, மே 22

கிளிநொச்சி, பரந்தன் – பூநகரி வீதியில் அமைந்துள்ள குடமுருட்டிப் பாலத்தின் உயர்ரக உலோகத்தினாலான கேடர்களைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பிரதான சந்தேக நபரான புத்தளத்தைச் சேர்ந்த இரும்பு வியாபாரி தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி பரந்தன் பூநகரி வீதியில் 14ஆவது கிலோ மீற்றரில் அமைந்துள்ள குடமுருட்டிப் பாலத்தின் இரும்புகள் திருடப்பட்டுள்ளமையால் பாலத்தின் ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்த போது இந்தப் பாலத்தின் பாகங்கள் திருடப்பட்டுள்ளன. இருப்பினும், அந்தப் பாகங்களை சாதாரணமாக அதன் ஆணிகள், நட்டுக்கள் என்பவற்றை கழற்றித் திருட முடியாது.

பாலத்தில் இரும்புக்காகத் திருடப்பட்ட துருப்பிடிக்காத கேடர்களின் பெறுமதி ஒரு கோடி ரூபா தொடக்கம் ஒன்றரைக் கோடி ரூபா வரையாகும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் பிகே. இளங்கீரன் தெரிவித்திருந்தார்.

நாளாந்தம் அதிகளவான மக்கள் மற்றும் வாகனங்களின் போக்குவரத்து மார்க்கத்தில் உள்ள பிரதான வீதி ஒன்றின் முக்கியமான பாலத்தின் பாகங்கள் இரும்புக்காக திருடப்பட்டமை மன்னிக்க முடியாத சம்பவம் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பணிமனைக்கு முன்பாக உள்ள பழைய இரும்பு விற்பனை செய்யும் இடத்தில் பாலத்தின் பாகங்கள் அறுக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன. அங்கு பணியாற்றிய கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு பாலத்தின் மற்றொரு தொகுதி பாகங்கள் கிளிநொச்சி ஏ – 9 வீதியில் தொண்டமான் நகர் பகுதியிலும் கண்டுபிடிக்கப்பட்டன. எனினும் அங்கு எவரும் இல்லையெம்பதால் அந்த வளாகம் பொலிஸாரால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான புத்தளத்தைச் சேர்ந்த இரும்பு வியாபாரி தலைமறைவாகியுள்ளார் என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளத்தளத்தைச் சேர்ந்த இரும்பு வியாபாரிக்கு கிளிநொச்சி, தர்மபுரம் எனப் பல இடங்களில் பழைய இரும்புகளைச் சேகரித்து வைக்கும் இடங்கள் உள்ளன. அந்த இடங்கள் சோதனையிடப்படுகின்றன. எனினும் வியாபாரி தலைமறைவாகியுள்ளார்.

இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் பலருக்குத் தொடர்புண்டு. திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் கண்டறியப்படவேண்டும். விசாரணைகள் தொடர்கின்றன.

கைது செய்யப்பட்ட முதலாவது சந்தேக நபர் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் நேற்று முன் தினம் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்றும் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பரந்தன் – பூநகரி குடமுருட்டிப் பாலத்தில் தினமும் ஆயிரக்கணக்கானோர் பயணிக்கின்ற நிலையில் கனரக வாகனப் போக்குவரத்து தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது. பாலத்தின் உறுதித்தன்மை சீராக்கம் செய்யப்படும் வரை இந்தத் தடை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.



# ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள்!

அம்பாறை, மே 22

அம்பாறை - கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் ஒரே சூலில் 3 குழந்தைகளை பெண்மணி ஒருவர் பெற்றெடுத்தார்.

பிரவச வலி எனத் தெரிவித்து, 28 வயதுடைய கோமாரி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் நேற்று வியாழக்கிழமை அந்தப் பகுதியிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் திருக்கோவில் அக்கரைப்பற்று வைத்தியசாலைகளுக்குச் சிகிச்சைக்காக மாற்றப்பட்டார்.

அதன்பின் மேலதிக சிகிச்சைக்காக கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், அங்கு சத்திர சிகிச்சை மூலம் ஒரு சூலில் 3 ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

தற்போது குழந்தைகளும் தாயும் நலமாக உள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சத்திர சிகிச்சையை மகப்பேற்று வைத்திய நிபுணர் ராஜிவ் விதானகே தலைமையிலான வைத்திய குழுவினர் மேற்கொண்டனர்.

இதில் மூன்று ஆண் குழந்தைகளும் தலா 1800 கிராம், 2190 கிராம், 2240 கிராம் நிறையுடன் ஆரோக்கியமாக உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோன்று கடந்த மாதமும் இதே வைத்தியசாலையில் ஒரே சூலில் 3 குழந்தைகளை நிந்தவூரைச் சேர்ந்த பெண்மனி ஒருவர் பெற்றெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மண் அகழ்வு தடுத்து நிறுத்தப்பட்டது

வவுனியா, மே 22

வவுனியா – செட்டிகுளம் கல்நாட்டியில் மக்கள் விவசாயம் செய்யும் பகுதிக்கு அண்மையில் மேற்கொள்ளப்படும் மண் அகழ்வு, பிரதேச சபை உறுப்பினரின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

செட்டிகுளம் பிரதேச சபைக்குட்பட்ட கன்னாட்டி பகுதியிலுள்ள ஐந்து குளங்களின் கீழ் 320 ஏக்கர் பரப்பில் வேளாண்மை மேற்கொள்ளப்படுகின்றது.

அந்தக் கிராமங்களில் வாழும் மக்கள் வாழ்வாதாரமாக விவாசாயத்தையே மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான நிலையில் அந்தப் பகுதியில் பல டிப்பர்களில் மண் அகழப்பட்டு வருகின்றது.

பரராஜகுளம், கொல்லங்குளம், துத்திக்குளம், மரக்காரம்பளை குளம், ஊறங்குளம் போன்ற ஐந்து குளங்களுக்கான நீர் கன்னாட்டிப் பகுதியில் இருந்தே செல்கிறது. இவ்வாறு மண் அகழப்படுவதால், இப்பகுதிகளில் நீர் தேங்கி நிற்கும் நிலை ஏற்படுகின்றது.

இந்நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் இன்று வெள்ளிக்கிழமை போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினர் அலைக்ஸ் யூட் மண் அகழ்வில் ஈடுபடும் நபர்களிடம் அனுமதிப் பத்திரங்களை காண்பிக்குமாறு கோரியபோது பிரதேச சபையின் அனுமதி இருந்திருக்கவில்லை.

எனவே, உடனடியாக உரிய முறையில் அனுமதியை பெறுமாறு கோரி மண் அகழ்வை நிறுத்தியதையடுத்து மக்கள் அவ்விடத்திலிருந்து அகன்று சென்றனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினர், கன்னாட்டி பிரதேச பங்குந்தந்தை, பிரதேச மக்கள், கிராம அமைப்புக்கள், கமக்கார அமைப்பினர் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# பலசாலியாகத் தன்னை காட்ட முயல்கிறது சு.க.

## கூறுகின்றார் மஹிந்த சமரசிங்க



கொழும்பு, மே 22

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தன்னைப் பலசாலியாக காண்பிப்பதற்கு முயல்கின்றது என முன்னாள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து முன்னாள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க நீக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனக்கு அரசியல் செல்வாக்கு இல்லாத நிலையிலும் அவ்வாறான செல்வாக்கு உள்ளதாக காண்பிப்பதற்கான முட்டாள்தனமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். கட்சியை அடிப்படையாக வைத்து முட்டாள்தனமான தந்திரோபாயங்களை முன்னெடுப்பவர்கள் குறித்து தான் கவலையடைகிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

தான் சில மாதங்களுக்கு முன்னரே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்துவிட்டார் என்றும், களுத்துறையில் போட்டியிடுவதற்கான வேட்புமனு வைத் தாக்கல் செய்வதற்கு முன்னதாகவே தனக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமை கிடைத்துவிட்டது எனவும், இதன் காரணமாக தனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி விடுத்துள்ள அறிவிப்பு அர்த்தமற்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொழும்பில் நிர்க்கதியாகியிருந்த

# இரண்டாயிரம் பேர் சொந்த ஊர்களுக்கு

கொழும்பு, மே 22

ஊரடங்குச் சட்டத்தினால் கொழும்பில் நிர்க்கதிக்குள்ளான மேலும் இரண்டாயிரம் பேர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு தெற்கு பொலிஸ் பிராந்தியத்தில் தற்காலிகமாக தங்கியிருந்தவர்களே இவ்வாறு நேற்று சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நுவரெலியா, கண்டி, காலி, மாத்தறை உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நாரஹேன்பிட்டி சாலிகா மைதானத்துக்கு வரவழைக்கப்பட்ட இவர்கள், சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 40 பஸ்களில் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சொந்த ஊருக்கு சென்ற பின்னர், சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவது தொடர்பில் இவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikathir

நடனம்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

**நாளைய (23.05.2020) தலைப்பு நடனம்**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# போக்குவரத்துச் சபையை வருமானமீட்டும் அமைப்பாக மாற்ற ஜனாதிபதி நடவடிக்கை

திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்கப்படுவதற் குப் பதிலாக திறைசேரிக்கு நிதியை பெற்றுக்கொடுக்கும் அரச நிறுவனமாக இலங்கை போக்குவரத்து சபையை மாற்ற முடியும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.



இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:–

இலங்கைப் போக்குவரத்து சபையை, இலாபமீட்டும் முன்னணி நிறுவனமாக மாற்றுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்மொழிவுகளை முன்வைத்துள்ளார்.

திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்கப்படுவதற்கு பதிலாக திறைசேரிக்கு நிதியை பெற்றுக்கொடுக்கும் அரச நிறுவனமாக இலங்கை போக்குவரத்து சபையை மாற்ற முடியும்.

கிழமை நாள்களில் முற்பகல் மற்றும் பிற்பகல் வேலைகளில் அதிக வாகன நெரிசல் காணப்படுகிறது. இந்த நெறிசலைக் குறைப்பதற்காக தமது சொந்த கார்களில் அலுவலகங்களுக்கு வருவோரை பொதுப்போக்குவரத்து சேவையுடன் இணைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதற்குத் தீர்வாக தெரிவு செய்யப்பட்ட இடங்களில் கார்களை நிறுத்தி அலுவலகங்களுக்கு பஸ்களில் பயணம் செய்வதற்கு தேவையான முறைமையொன்றை (Park and Drive) உடனடியாக அறிமுகப்படுத்துமாறு ஜனாதிபதி முன்மொழிந்தார்.

இதற்கு முழுமையான வசதிகளைக் கொண்ட பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

பாடசாலைமாணவர்களுக்காகபாதுகாப்புக்கு முன்னுரிமையளித்து பாடசாலை பஸ் சேவையை மேம்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பாடசாலை பஸ்களை மஞ்சள் நிறத்துடன் வீதிகளில் முன்னுரிமை வழுங்கப்படக் கூடிய வகையில் சேவையில் ஈடுபடுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களையும் தனியார் பஸ்களையும் இரண்டு நிறங்களில் சேவையில் ஈடுபடுத்துவன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஊழியர்களை வலுவூட்டுதல், புதிய முறைமைகளை அறிமுகப்படுத்தல், வீண் விரயத்தை குறைத்தல் மற்றும் திருட்டுக்களை ஒழித்தல் போன்றவற்றுக்காக முறையான நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டியது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

நிறுவனத்தை முன்னேற்றுவதற்காக தொடர்ச்சியாக ஆய்வுகள் மற்றும் மீளாய்வுகள் இடம்பெற வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சுமார் 4500 பேர் கொண்ட திறமையானதொழிநுட்பஅதிகாரிகள்குழுவொன்று இலங்கை போக்குவரத்து சபையில் உள்ளனர். அவர்களிடமிருந்து முழுமையான பயனைஒ பெற்று நிறுவனத்திற்கு வெளியே பராமரிப்புக்காக செயற்கட்டளைகளைப் பெற்று வருமானம் ஈட்ட முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பட்டார். பயன்படுத்தப்படாத பெருமளவான காணிகள் இலங்கை போக்குவரத்து சபையிடம் உள்ளன. அக்காணிகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதன் மூலமும் வருமானம் ஈட்டமுடியும்.

கிராமிய பிரதேசங்களில் இருந்து விவசாய அறுவடைகளை கொண்டுசெல்வதன் மூலம் விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் உதவக்கூடிய வாய்ப்புகள் இலங்கை போக்குவரத்து சபையிடம் உள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பயிற்சிப் பாடசாலைகளை மேலும் மேம்படுத்தி ஊழியர் அறிவை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத் திட்டத்திற்கு அமைய மொத்த நடடிவக்கைகளையும் முன்கொண்டு செல்வதற்கும் ஜனாதிபதியினால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, இலங்கைப் போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக, தலைமை நிறைவேற்று அதிகாரி சாகர ஹேமந்த வடுகே, பணிப்பாளர் நாயம் அதுல குமார மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

### அம்பன் புயலினால் அள்ளுண்டு சென்ற

## இலங்கை மீனவர்களின் 30 படகுகளை மீட்க கடற்படைக் கப்பல் இந்தோனேஷியா விரைவு

கொழும்பு, மே 22

அம்பன் புயலினால் அள்ளுண்டு சென்று இந்தோனேசிய கடலோரத்தில் கரையொதுங்கியுள்ள இலங்கை மீனவர்களின் படகுகளை மீளக் கொண்டு வர ஸ்ரீலங்கா கடற்படை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக ஆழ்கடல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் சிறப்பு கப்பல் ஒன்று நேற்று வியாழக்கிழமை காலை புறப்பட்டுச்சென்றுள்ளது எனக் கடற்படை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடலில் அடித்துச் செல்லப்பட்ட 30க்கும் மேற்பட்ட இலங்கை மீனவர்களின் படகுகள் இந்தோனேசியக் கடல் எல்லையில் காணப்படுகின்றன.

இப்படியான அனர்த்த நேரங்களில் விரைந்து செயற்படுகின்ற கடற்படையின் மற்றுமொரு மனிதாபிமான நடவடிக்கையாக இந்த மீன்பிடிப் படகுகளை கொண்டுவரத் தேவையான எரிபொருள் உட்பட பொருள்களை ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல் எடுத்துச் சென்றுள்ளது என கடற்படைச் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

## விடுதி மீது மரம் விழுந்து பொலிஸ் அதிகாரி காயம்

### கிளிநொச்சியில் நேற்று சம்பவம்

கிளிநொச்சி, மே 22

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் விடுதி மீது பாரிய மரம் முறிந்து விழுந்ததில் பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார்.



கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வீசிவரும் கடும் காற்றினால் பல்வேறுப்பட்ட பாதிப்புக்கள் ஏற்பட்டன.

இந்நிலையில், நேற்று வியாழக்கிழமை மாலை இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்திலுள்ள மாமரம் ஒன்று பொலிஸார் தங்கும் விடுதி மீது முறிந்து விழுந்துள்ளது.

இதன்போது கிளிநொச்சி இராமநாதபுரத்தில் பணிபுரியும் பிரஜீவன் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்து கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் அதே விடுதியில் தங்கியிருந்த ஏனைய பொலிஸ் அதிகாரிகள் இருவருக்கு எதுவித காயங்களும் ஏற்படவில்லையென்பத குறிப்பிடத்தக்கது.

## தீயில் எரிந்து காடு நாசம்!

மட்டக்களப்பு, மே 22

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாசிக்குடாப் பிரதேசத்தில் சுமார் நான்கு ஏக்கர் காடு தீப்பற்றி எரிந்துள்ளதாகக் கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

பாசிக்குடா முருகன் ஆலய வீதியிலுள்ள அரச காணியொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கல்குடா கிராம சேவை அதிகாரி க.கிருஷ்ணகாந் தெரிவித்தார்.

கல்குடா பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மட்டக்களப்பு மாநகர தீயணைப்புப் படையினர், கல்குடா பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் தீ மேலும் பரவாமல் தடுக்கப்பட்டு கட்டுபாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தீ பரவல் சம்பவத்துக்கான காரணம் தெரியவில்லை எனவும், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.05.2020 இல் வெளியிடப்பெற்றது.